**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.191/17** P.W. 8

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. டாக்டர் அன்வர்சாதாத் | Father's / Husband Name . கிதர்முகமது | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :17.07.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.07.2019.

**முதல் விசாரணை.**

நான் தற்பொழுது திருவாரூர் நகரில் தனியார் அன்வர் ஸ்கேன் நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.9.2010 அன்று திருவாரூர் மெடிக்கல் சென்டரில் பணிபுரிந்தபோது நாகை அரசு மருத்துவமனையில் இருந்து சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்ட திரு. பன்னீர்செல்வம் வயது 51 என்பவரை சிடி ஸ்கேன் ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின்படி அவருடைய தலையில் இடது பக்கம் ஒரு நுண்ணிய எலும்பு முறிவு Linear fracture in left parietal bone ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவருடைய இடது பக்க மூளையின் மேற்பரப்பில் ரத்த கசிவு இருந்ததும் கண்டறியப்பட்டது. இது வகைக்கு என்னால் பன்னீர்செல்வத்திற்கு சிடிஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது பொறுத்து நான் அறிக்கை வழங்கியுள்ளேன். அதற்கான சான்று அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது வகைக்கு கரியாப்பட்டினம் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை.**

நான் சிடிஸ்கேன் பரிசோதனை தவிர வேறு சிகிச்சை எதையும் பன்னீர்செல்வத்திற்கு அளிக்கவில்லை என்றால் சரிதான். திருவாரூர் மெடிக்கல் சென்டரில் இருந்து அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்து அங்கிருந்து சிடிஸ்கேன் பரிசோதனைக்காக அதே மருத்துவமனையில் உள்ள சிடிஸ்கேன் பிரிவிற்கு பரிந்துரைக்கப்பட்டார். திருவாரூர் மெடிக்கல் சென்டருக்கு எந்த மருத்துவமனை வழி பரிந்துரை பெற்று பன்னீர்செல்வம் வந்தார் என்பது குறித்து எனக்குத் தெரியவில்லை. அவசர சிகிச்சை பிரிவில் இருந்து சிடிஸ்கேன் பிரிவிற்கு பரிசோதனைக்கு பரிந்துரைத்த மருத்துவர் பெயர் தற்பொழுது ஞாபகம் இல்லை. அதற்கான ஆவணத்தை பார்த்தால் என்னால் சொல்லமுடியும். அதற்கான ஆவணம் அதசாஆ.4 என்றால் அதில் Self என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன எலும்பு முறிவு காயம் காயம் பட்டால்தான் ஏற்படும். அந்த காயமானது மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. தனியார் மருத்துவமனை என்பதை அனுகூலமாக எடுத்துக்கொண்ட பன்னீர்செல்வம் தானாக கீழே விழுந்து

**S.C.191/17** P.W. 7

அப்படி ஒரு காயத்தை ஏற்படுத்திக்கொண்டு என்னிடம் வந்து சிடிஸ்கேன் பரிசோதனை எடுத்துக்கொண்டுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் அவருடைய காயம் பற்றிய விபரங்கள் தவறு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.